இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 49 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 12 – ஞாயிற்றுக்கிழமை 28 செப்டம்பர் 2025 – சென்னை 10 + 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 49: Thiruvalluvar Year - 2056 - Purataasi 12- Sunday 28 September 2025 - Chennai 10+16 Pages ₹ 5.00

### உழவர்களுக்கும் உழவுத் தொழிலுக்கும் எந்தவித ஊறும் நேர்ந்து விடாமல் ‘திராவிட மாடல்’ அரசு செயல்பட்டு வருவதால்

# தமிழ்நாடு வேளாண்மையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

## “வேளாண் வணிகத் திருவிழா – 2025”-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, செப்.28 –**

**“உழவர்களுக்கும் உழவுத் தொழிலுக்கும் எந்தவித ஊறும் நேர்ந்து விடாமல் ‘திராவிட மாடல்’ அரசு செயல்பட்டு வருவதால் தமிழ்நாடு வேளாண்மையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற “வேளாண் வணிகத் திருவிழா - 2025” விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் “வேளாண் வணிகத் திருவிழா 2025”ல் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக செயல்பாடுகள் குறித்த கண்காட்சி அரங்குகள் மற்றும் கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு: –

நேற்று முன்தினம் நடைபெற்ற, “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” அந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது என்பதை நீங்கள் எல்லோரும் நன்றாக அறிவீர்கள். அதனை இன்றுவரையில் பலரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது, கல்வியில் மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகின்ற தமிழ்நாட்டை, தொடர்ந்து நாம் கொண்டாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு சாட்சியாக, அப்படி, இன்று இந்த விழா “வேளாண்மையில் சிறந்த தமிழ்நாடு” என்று சொல்லும்படியான விழாவாக அமைந்திருக்கிறது!

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்துக்கு வாழ்த்துகள்!**

இந்த விழாவை மிகச் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்து, உங்கள் எல்லோரையும் சந்திக்கின்ற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய இந்தத் துறையின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “வேளாண் வணிகத் திருவிழா 2025ல்” வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக செயல்பாடுகள் குறித்த கண்காட்சி அரங்குகள் மற்றும் கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்து, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறைகளில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில், அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

வேளாண் விளைபொருட்களை, நேரடியாக சந்தைப்படுத்திட, இந்தக் கண்காட்சியும், கருத்தரங்குகளும் விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது! இந்த முன்னெடுப்பு, விவசாயிகளுக்கு புதிய சாகுபடி முறைகள் மற்றும் வேளாண் வணிக வாய்ப்புகளை பற்றித் தெரிந்து கொள்வதற்கான ஒரு முக்கிய தளமாக இது அமைந்திருக்கிறது! இதனால், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தை வாய்ப்புகள் உருவாகுவதோடு, ஏற்றுமதிக்கான வாய்ப்பு இன்னும் அதிகளவில் ஏற்படும். வேளாண் வணிகம் தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகளால், விவசாயிகளின் வணிகத் திறன் மேம்படும்.

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, வேளாண்மைத் துறை என்று இருந்த பெயரை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை என்று பெயரை மாற்றி, நம்முடைய அரசின் நோக்கம் என்னவென்று எல்லோருக்கும் அறிவித்தோம்! அப்படித்தான், நம்முடைய அரசின் ஒவ்வொரு திட்டங்கள் மூலமாகவும், வேளாண்மையும் அதிகரிக்க வேண்டும்; உழவர்ககளின் வாழ்க்கைத்தரமும் மேம்பட வேண்டும் என்று பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறோம்!

**உழவர்களின் கருத்துக்களைக் கேட்டு செயல்படும் அரசு!**

உழவர்களின் கருத்துக்களை விருப்பத்தை கேட்டு, செயல்படும் அரசாக இருந்து கொண்டிருக்கிறோம்! தமிழ்நாடு முழுவதும் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி, அதனடிப்படையில், திட்டங்களை, வேளாண் நிதி நிலை அறிக்கைகளில் அறிவித்தோம்! அதன் பலனாக இப்போது, வேளாண்மையில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்து வருகிறது.

முன்பெல்லாம், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையை திறப்பதற்கு எப்படி லேட் ஆகும் என்று உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்! ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, மேட்டூர் அணையை குறித்த நாளில் திறந்து கொண்டிருக்கிறோம்!

இந்த ஆண்டு, 5.66 இலட்சம் எக்டரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது! இது கடந்த ஆண்டைவிட ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 494 ஏக்கர் கூடுதல் நெல் சாகுபடி! இதற்கு தேவையான உரங்களை, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள்! இப்படி, தமிழ்நாட்டில் உழவர்களுக்கோ, வேளாண்மைக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்று முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

**தமிழ்நாடு முழுவதும் முகாம்கள்!**

உழவர் பெருமக்களை அவர்களுடைய ஊரிலேயே சந்தித்து, தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி, பிரச்சினைகளை உடனே தீர்க்க “உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை” என்ற திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் அனைத்து கிராமங்களிலும், முகாம்கள் மூலமாக தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறோம்! இப்படியெல்லாம், நாம் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தால் தான், கடந்த நான்கு ஆண்டுகளில், 456.44 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை எட்டியிருக்கிறோம்!

இன்னும் பெருமையோடு சொல்கிறேன்... மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு எக்டருக்கு 2 ஆயிரத்து 835 கிலோவாக இருந்த உணவு தானிய உற்பத்தி, இப்போது, 2 ஆயிரத்து 857 கிலோவாக அதிகரித்திருக்கிறது!

**நான்காண்டு கால சாதனைகள்!**

இந்த நான்கு ஆண்டு கால சாதனைகளை எல்லாம் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால்,

பயிர் உற்பத்தித் திறனில், இந்திய அளவில் நாம் தான் முதலிடம்!

மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பில் இரண்டாம் இடம்!

குறு தானியங்கள் மற்றும் நிலக்கடலையில் மூன்றாம் இடம்! இதிலும், நாம் முதலிடம் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம்!

இதற்காக தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு கிராமமும் மென்மேலும் வளர்ச்சி அடையவேண்டும் என்று “கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்” என்ற மாபெரும் திட்டத்தை உருவாக்கினோம்!

இதனால், கடந்த நான்கு ஆண்டுகளில், பத்தாயிரத்து 187 கிராம ஊராட்சிகளில், 52 இலட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நான் பெருமையோடு சொல்கிறேன்... 47 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை மீண்டும் சாகுபடிக்கு கொண்டு வந்திருக்கிறோம்!

அடுத்து, மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில், இதுவரைக்கும் 20 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 130 இலட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### விதிகளை மீறிப் பிரச்சாரம்: நடிகர் விஜய் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 31க்கும் மேற்பட்டோர் பலி!

# கரூரிலிருந்து வரும் செய்திகள் கவலையளிக்கின்றன!

## தேவையான உதவிகளை மேற்கொள்ள உத்தரவு! கரூர் விரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு வேண்டுகோள்!

**சென்னை, செப்.28–**

**கரூரில் நேற்று நடிகர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கி குழந்தைகள் உட்பட 31க்கும் மேற்பட்டோர் பலியான சோக நிகழ்ச்சி அனைத்து தரப்பு மக்களின் நெஞ்சங்களையும் பதற வைத்துள்ளது.**

50-க்கும் மேற்பட்டோர் மயக்கமுற்றும், பல உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ள நிலையில் கரூர் மருத்துவமனையில் பெரும் பரபரப்பு காணப்படுகிறது. 100க் கணக்கானோர் மருத்துவமனை முன் குவிந்து கதறி அழும் காட்சி காண்போரை கலங்கச் செய்துள்ளது.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜியை தொடர்பு கொண்டு மருத்துவமனைக்கு விரைந்து சென்று தேவையான உதவிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். வி.செந்தில்பாலாஜி மருத்துவமனைக்கு விரைந்து சென்று உரிய உதவிகளை மேற்கொண்டார்.

அத்துடன் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோரையும் கரூருக்கு விரைந்திட உத்தரவிட்டார்.

கரூரில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதம் குறித்து மாவட்ட ஆட்சியரிடமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்ததுடன் தேவையான உதவிகளைச் செய்திடுமாறு உத்தரவிட்டார்.

மேலும் திருச்சி, சேலம், நாமக்கல் மாவட்டங்களிலிருந்து மருத்துவக்குழுவும் கரூர் விரைந்துள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சையை விரைந்து வழங்கிட முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

காவல்துறை உயர் அதிகாரிகளையும் கரூருக்கு விரைந்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

விதிகளை மீறி நடிகர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டதால்தான் இத்தகைய சம்பவம் நடைந்தேரியிருக்கிறது.

**கரூருக்கு விரைந்தார் முதல்வர்!**

இந்நிலையில் நேற்று இரவு தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்ட முதல்வர் அவர்கள் உடனடியாக நேற்று இரவே கரூர் விரைந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘ட்விட்டர்’ பதிவில் கரூர் செய்திகள் கவலையளிக்கின்றன என வேதனை தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

**கூட்ட நெரிசலில் சிக்கி மயக்கமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குத் தேவையான உடனடி சிகிச்சைகளை அளித்திடும்படி,**

**முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மாவட்ட ஆட்சியரையும் தொடர்புகொண்டு அறிவுறுத்தியுள்ளேன்.**

**அருகிலுள்ள திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களிடமும் போர்க்கால அடிப்படையில் தேவையான உதவியினைச் செய்து தரும்படி உத்தரவிட்டிருக்கிறேன். அங்கு, விரைவில் நிலைமையைச் சீராக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ADGPயிடமும் பேசியிருக்கிறேன்.**

**பொதுமக்கள் மருத்துவர்களுக்கும் காவல் துறைக்கும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.